Verified Real Estate ™

(1)

தீர்ப்பு

பதாமனிப்பு : மேல்சபை புறம்போக்கு நிலங்களை வகைமாற்ற நிபந்தனை மாற்றம் செய்யக் கோரி ஏற்கனவே அனுமதி வழங்கியிருத்தல்.

கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் (கூபப2) துறை

(நிலை) எண் 186 நாள்: 11.12.2001.

திருவள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாசி 25

வழக்கு எண் 00313 / 2001 தாக்கல் செய்யப்பட்டது

(1) கால்நடை பராமரிப்புத்துறை நியமனாதிகாரி 27.9.2001 நாளிட்ட கடிதம் எண் 7699/மூ1/2001.

கால்நடைக்கான் சரியான வளர்ப்பதற்கு, கால்நடைத்தீவனம் போன்ற வகையில் மிகவும் இன்றியமையாததாக விளங்குவதோடு நிரந்தரமான நிலங்கள், கட்டுமானப் பணிகளுக்காகவும், ஏனைய பணிகளுக்காகவும் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மேய்ச்சல் நிலப்பகுதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் மாற்றிட, புறம்போக்கு மேய்ச்சல் நிலத்தை வேறு நிலமாகவும் மாற்றுவதோடு, அவ்வாறு மாற்றவேண்டுமென்றால் ஏற்படும்போது, மாற்றப்படும் நிலத்திற்குச் சமமான பரப்பளவை வேறு இடமாகப் பயன்படுத்த ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் சென்ற 2001-2002ம் நிதியாண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைப் பராமரிப்புத் துறை நியமனாதிகாரின் முதலில் படிக்கப்பட்ட கடிதத்தில் கண்டுள்ளவாறு செய்த விண்ணப்பத்தில் கோரியிருப்பதாவது:-

ஏற்கனவே உள்ள மேய்ச்சல் நிலங்களை வேறு பயன்பாட்டுக்காக மற்றும் வேறுவகைக்கு மாற்றம் செய்யக்கூடாது.

அப்படி வேறு வகைக்கு மேய்ச்சல் நிலங்களை மாற்றம்செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படின் அம்மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைந்த மாவட்ட அளவிலான ஆட்சிக் குழுவின் அனுமதியுடன் மாவட்டத்தில் சமமான பரப்பளவில் மாற்று நிலங்களை மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்திக் கொள்ள தெரிவு செய்யப்பட வேண்டும்.

மாற்று நிலத்திலுள்ள புதர்களை நீக்கி சமன் செய்தும் உழுது செய்து தரும் வகையில் பல்லினப்புல்லைத் தெளித்து மேய்ச்சல் நிலமாக்க ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) முதல் தர உறுதிப்பாட்டுக்கு ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)-ஐ மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்படும் மாவட்டத்தின் முதல் நிலை பொது நிருவாகத்துறை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இத்தொகையை மாவட்ட ஆட்சித் தலைவரின் கணக்கில் வரவு வைத்தல் வேண்டும். மேய்ச்சல் நில மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான செலவுகளை ஈடுசெய்வதற்கும் பயன்படுத்தப்பட்ட தொகை மீண்டும் அளிக்க வேண்டும்.

உ) அவ்வாறு மேம்பட்டதல் நிலமாக மாற்றப்படும் நிலத்தில் அப்பகுதியை சார்ந்த கால்நடைகள் நிலைமாக மேய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அனுமதி வழங்க வேண்டும்.

3. மேலே பத்தி 2 (ஆ)ல் கூறப்படும் இயற்கை பயன்பாட்டு அமைப்புகள் மேய்ச்சல் நிலமாக மாற்றப்படுவதற்காக வழிமுறைகளை தலைமை நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து அதிகாரிகளுக்கும்

(அனுகாமல் அனுப்புக).

ஆ : இராஜ் நிரஞ்சன்,
அரசுச் செயலாளர்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 6.
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை – 6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சென்னை – 9.

நிதி (ஊரகம்) துறை, சென்னை – 9.
நிதி (நகராட்சி நிர்வாகம்) துறை, சென்னை – 9.
நிதி (ஊரக வளர்ச்சி) துறை, சென்னை – 9.
நிதி (சிறப்பு திட்டங்கள்) துறை, சென்னை – 9.
நிதி (மீன்வளம்) துறை, சென்னை – 9.
நிதி (கால்நடை பராமரிப்பு) துறை, சென்னை – 9.
நிதி (வேளாண்மை) துறை, சென்னை – 9.
நிதி (தோட்டக்கலை) துறை, சென்னை – 9.
நிதி (கூட்டுறவு) துறை, சென்னை – 9.
நிதி (பொதுத்துறை) துறை, சென்னை – 9.
நிதி (தொழில்) துறை, சென்னை – 9.
நிதி (சுற்றுலா) துறை, சென்னை – 9.
நிதி (தொழிலாளர் நலன்) துறை, சென்னை – 9.
நிதி (சமூக நலன்) துறை, சென்னை – 9.
நிதி (பொது) துறை, சென்னை – 9.
நிதி (பொது விநியோகம்

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

கால்நடை பராமரிப்புத்துறை - மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களை வேறெந்த உபயோகத்திற்காக மாற்றம் செய்யக்கூடாது என்பதற்கான ஆணைகள் வெளியிடப்படுகிறது.

கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் (காப2) துறை

அரசாணை (நிலை) எண்.186 நாள் 11.12.2001

படிக்கப்பட்டது

கால்நடை பராமரிப்பு த்துறை இயக்குநரின் 27.9.2001 நாளிட்ட கடிதம் எண்.7699/மை1/2001

ஆணை:

1. கால்நடைகளைச் சரிவர வளர்ப்பதற்கு கால்நடைத் தீவனம் போதிய அளவில் கிடைக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. தொன்றுதொட்டு இருந்துவரும் மேய்ச்சல் நிலங்கள், கட்டுமானப் பணிகளுக்காகவும், ஏனைய பணிகளுக்காகவும் வரையறையின்றி பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மேய்ச்சல் நிலப்பகுதி தவறாகப் பயன்படுத்தப்பட்டு குறைந்து வருகின்ற நிலையை மாற்றிட, புறம்போக்கு மேய்ச்சல் நிலத்தை வேறெந்த வகை நிலமாகவும் மாற்றக்கூடாது, அவ்வாறு மாற்ற வேண்டுமென்ற கட்டாயம் ஏற்படும்போது, மாற்றப்படும் நிலத்திற்குச் சமமான பரப்புள்ள வேறு நிலம் மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்த அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும் என்று 2001-2002ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

2. கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரின் முதலில் படிக்கப்பட்ட கருத்துருவினை அரசு தீவிர பரிசீலனை செய்து கீழ்வருமாறு ஆணையிடுகிறது.

அ. ஏற்கனவே உள்ள மேய்ச்சல் நிலங்களை வேறு பணிகளுக்காக மற்ற துறைகளுக்கு மாற்றம் செய்யக்கூடாது.

ஆ. அப்படி வேறு துறைகளுக்கு மேய்ச்சல் நிலங்களை மாற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்படின் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துரு அனுப்புவதற்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அதே மாவட்டத்தில் சமமான பரப்புள்ள மாற்று நிலத்தை மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்திக் கொள்ள தெரிவு செய்யப்பட வேண்டும்.

இ. மாற்று நிலத்திலுள்ள புதர்களை நீக்கி சமன் மற்றும் உழவு செய்து தொழு உரம் அடித்து புல்விதைகளைத் தெளித்து மேய்ச்சல் நிலமாக உருவாக்க செலவினம் ஒரு ஏக்கருக்கு ரூ.6,000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) அல்லது ஒரு ஹெக்டேருக்கு ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)-ஐ மேய்ச்சல் நிலம் தேவைப்படும் துறைகள் அல்லது பொது நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

Verified RealEstate ™

ஈ. அச்செலவினத் தொகையை உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கில் வைத்து மேய்ச்சல் நில மேம்பாட்டு பணிக்காக செலவிடப்பட வேண்டும். இதற்காக தேவைப்படும் அனைத்து ஆலோசனைகளும் சம்பந்தப்பட்ட அரசுத்துறைகள் அளிக்க வேண்டும்.

உ. அவ்வாறு மேய்ச்சல் நிலமாக மாற்றப்படும் நிலத்தில் அப்பகுதியைச் சார்ந்த கால்நடைகள் இலவசமாக மேய்வதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அனுமதி அளிக்க வேண்டும்.

3. மேலே பத்தி 2(இ)ன் மூலம் பெறப்படும் நிதியை பயன்படுத்தி உள்ளாட்சி அமைப்புகள் மேய்ச்சல் நிலமாக மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை வகுத்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அரசு அறிவுறுத்துகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து. இராசேந்திரன்
அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

Verified RealEstate ™

Verified RealEstate™

Verified RealEstate™